RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணனின் காலம் தோறும் பெண் படைப்பில் பெண்ணியச் சிந்தனைகள்

மா. விஜயகுமார் [அ, *], சு. சுசா [ஆ]

[அ] எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு சென்னை 600077. தமிழ்நாடு, இந்தியா,

[ஆ] தமிழ்த் துறை செல்லம்மாள் மகளிர் கல்லூரி கிண்டி, சென்னை- 600032

# Feminist Thoughts in the Portrayal of Women in Her Book Kaalam Thorum Penn of Writer Rajam Krishnan

**M. Vijayakumar** [a, *], **S. Susa** [b]

[a] Department of Tamil, S.A. College Of Arts & Science, Thiruverkaadu, Chennai -600077. Tamil Nadu, India

[b] Department of Tamil, Chellammal womens College, Guindy, Chennai- 600032

*Corresponding Author:

Received: 06-12-2025
Revised: 27-02-2026
Accepted: 09-03-2026
Published: 17-03-2026

Check for updates

## ABSTRACT

In her book 'Kalam Thorum Pen' (Woman Through the Ages), writer Rajam Krishnan reveals the situation where, even many years after independence, no significant changes have occurred in women's rights. The number of responsibilities women have to bear in the face of economic difficulties and social hardships has increased. In a situation where women are unaware and lack the consciousness that society oppresses them in various forms and angles, the ideas of women's rights become necessary. This book is perceived as striving to alleviate the suffering and sorrow experienced by women simply because they are women, and as fostering a fighting spirit and awareness to create the concept of equality between men and women in all spheres. In a context where many writers consider only tears and profound compassion as the elements of a successful work, literary creations are being published without examining the time period, the severity, and the causes and effects of the problems women face in various aspects of life. Many women remain unaware of this situation as well. In discussions about chastity, morality, and conduct, these should be made common to both genders. Marriage, media, wedding rituals, methods of worship, mantras, religious leaders, discrimination in the workplace, ridicule, sarcasm, and double entendres – all of these deprive women of their rights and treat them as inferior to men. Breaking down the traditions of chastity, family, and wifely devotion, and gaining awareness is an immediate necessity. Women, who were respected equally in the Vedic period, were gradually subjected to changes over time, undergoing various transformations and teachings, and were made to lose their influence through oral decrees. Female subjugation was introduced in various forms. The situation where people remain unaware that obstacles have been created for women in the name of culture, traditions, and religious customs, establishing a system where higher education, intellectual pursuits, multi-disciplinary research training, and achievements in spiritual endeavors are considered the exclusive domain of men, must change. In a context where newspapers, films, and television programs specifically target women and sow the seeds of female subjugation, the need for feminist thought and awareness of women's rights becomes crucial, a point that the writer Rajam Krishnan emphasizes through her book, 'Woman Through the Ages'.

**Keywords:** Rajam Krishnan, Women, Kaalamthorum Penn, Women rights, Feminism

## முன்னுரை

மக்கள் கூடி வாழுகின்ற அமைப்பு முறை சமூகம். "சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட சில பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காகமக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும்" (கலைக்களஞ்சியம் 1996: 477) இன்றைய நூற்றாண்டு சார் சமுதாய அமைப்பில் பெண்கள் தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை சிறந்து விளங்குகின்றனர். "உலகம் ஆண் பெண் என்னும் இரு பாலாலும் ஆக்கப்பட்டு இருக்கிறது. இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது இவ்விரண்டும் ஒன்றி இயங்கினால் அன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது"1என்கிறார். திரு.வி.க.பெண்ணுக்குப் படிப்பெதற்கு என்னும் நிலைமை மாறி இன்றைய பெண்கள் கல்வி கற்று முன்னேற்றம் கண்டுள்ளனர். சமூகத்தின் பல துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு உள்ளது. படித்துப் பட்டம் பெற்றுத் தனது உயர் அறிவாலும் மென்மையாலும் நாட்டையும் உலகையும் வளர்ச்சியின் பாதையில் கொண்டு செலுத்துவதற்குப் பங்களிப்பைச் செய்யும் நிலையிலும் ஆணாதிக்கம் தன் ஆதிக்கத்தை வாய்மொழியாகவும் உடல் ரீதியாகவும் உளவியல் முறையிலும் செலுத்திப்பெண்களைப் பணியச் செய்து வருகிறது. பெண் குழந்தைகள் பிறத்தல் கூடாது எனும் மனநிலையும் இன்றைய சமுதாயத்தில் இல்லாமல் இல்லை. பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா? என்பதை அறியும் போக்கு, தடைச்சட்டம் இருப்பினும் இன்றும் இக்குற்றங்கள் நடைபெற்று வருவதை நாளிதழ்கள் வாயிலாக அறிய முடிகிறது. சமூகத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்காகப் போராடுவதும் உரிமைகளுக்காகப் போராடுவதும் பெண்ணியமாகும். "பெண்ணியம் என்பது சமூக அக்கறையின் வெளிப்பாடு. சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தின் இருத்தலைப் பேசுவது; ஆணாதிக்கப் பிடியில் இருக்கும் நிகழ்வாழ்வின் இயல்பினை விண்டுரைப்பது; பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்க்க முயல்வது. "2

கல்வியும், இட ஒதுக்கீடும் பிற சலுகைகளும் வழங்கப்பட்டிருப்பதாகப் பேசப்படும் சூழலில் பெண்ணுரிமைச் சிந்தனைகளைக் காலந்தோறும் பெண் எனும் ராஜம் கிருஷ்ணனின் படைப்பின் வழி இக்கட்டுரை ஆய்கிறது.

## திருமணப் பந்தத்தில் பெண்

இருபது ஆண்டுகள் வரை தாய் தந்தையரின் பராமரிப்பில் வளரும் பெண் திருமணம் என்னும் பந்தத்தில் கணவன் வீட்டிற்குச் செல்லுகிற போதும் அவளுக்கான உரிமைகள் அவளுக்கான சிந்தனைகளைச் செயல்படுத்தும் போக்கு பல குடும்பங்களில் நிறைவேறுவதில்லை. திருமணத்திற்குப் பக்குவப்படாத சூழலிலும் திருமணம் பல இடங்களில் நடந்து விடுகிறது. பெண்ணின் விருப்பமும் பல இடங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. நம் சமூகத்தில் இன்னும் வரதட்சணை முற்றிலும் ஒழிக்கப்படவில்லை. பல சவரன் வரதட்சனைச் சீர்கள் பெண் கொண்டு வருகிறாரோ அதற்குத் தகுந்த மாதிரி மரியாதை வழங்கும் போக்கு இன்றைக்கும் நடைமுறையில் இருக்கிறது. "படிப்பாவது இன்னொன்றாவது வயது 24 என்றால் இதற்குள் திருமணம் முடித்து ஒரு குழந்தையை ஏந்தி இருக்க வேண்டும். இனிமேலும் தாமதமா? எப்படியேனும் திருமணத்தை முடித்தாக வேண்டும் இல்லையேல் குடி மூழ்கிப் போய்விடும் என்பது மூத்த தலைமுறைப் பிடிவாதங்கள். "3 என்று இன்றைய சமூகத்தின் மனநிலையைப் பதிவு செய்கிறார் ராஜம் கிருஷ்ணன்.

பெண் தன் ஆற்றலையும், அறிவையும் வெளிப்படுத்தித் தன் விருப்பப்படி வாழும் உரிமை இந் நூற்றாண்டிலும் மறுக்கப்படுகிறது. பெண்ணின் முழு அறிவு, ஆற்றல் ஆளுமைச் சிறப்பு, எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவது கற்பு நெறி என்ற அழுத்தமான ஒரு ஒழுக்க வளையம் தான் என்பது கூர்ந்து சிந்தித்தால் புலனாகிறது என்ற வரிகள் இன்றைய காலகட்டத்தின் நிலையை எடுத்துரைப்பதாக அமைகின்றன.

"Slim, fair, Tall ஒல்கி ஒசிந்து உயரமாகச் சிகப்பாக என்று எந்த ஆணும் தான் திருமணம் செய்து கொள்ள இருக்கும் பெண்ணுக்கு இலக்கணம் வகுத்து நிபந்தனை போடுகிறான். எந்தப் பெண்ணும் தனக்கு வாழ்க்கைத் துணைவனாகக் கூடிய ஆண் இப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிப்படையாக விளம்பரம் செய்து விட முடியாது அவள் வேண்டுமானால் கனவு காணலாம். வெளிப்படையாக பெற்றோர் கூறக்கூடியதெல்லாம் படிப்பு, உத்தியோகம் அல்லது தொழில், பொருளாதாரம் சார்ந்த நிலை, சாதி போன்ற பொதுத் தகுதிகள் தான் தனித்தன்மை பற்றிக் கேள்வி கிடையாது. அத்துடன் அவளுக்கு மடமை அச்சம் ஆகிய குறைகள் சிறப்பானவை."4

தனக்கு மனைவியாக வரவேண்டியவள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதை ஆண் வெளிப்படுத்துவதைப் போலப் பெண்ணும் வெளிப்படுத்த நிபந்தனை போட இயலும். ஆனால் அந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் பாலினப் பாகுபாடு இன்றைக்கும் இருக்கிறது.

## காட்சி ஊடகங்களில் பெண் சித்தரிப்பு

நாடகம் திரைப்படமான சூழல் மாறித் திரைப்பட நடிகர் நடிகையர் மற்றும் இயக்குநர்கள் தொலைக்காட்சி ஊடகத்திற்குள் வருகை தந்து விட்டனர்.

மாலை நேரங்களில் தொடங்கும் தொலைக்காட்சித் தொடர்கள் இரவு வரையிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. வருடக்கணக்கில் பயணப்படும் தொலைக்காட்சித் தொடர்களில் பெண்கள் குறித்தான சித்தரிப்பு கவனத்திற்குரியதாகக் கருதப்பட வேண்டியதாக இருக்கிறது.

வசனங்கள், கதாபாத்திரங்கள், காட்சி அமைப்புகள் ஆகியவற்றில் பெண்ணுக்குச்சிறப்பிடம் வழங்கப்படுவதாகத் தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கினால் பெண்ணுக்குரிய இயல்பினைக் கிண்டல் செய்தும், கேலி செய்தும், பெண்ணுரிமையைப் போற்றாத பாங்கையும் நாம் உணர முடியும். "ஒரு பெண் அடங்காப்பிடாரியாக இருக்கிறாள்; வம்பு பேசுகிறாள்; புருஷனுக்கு நஞ்சூட்டுகிறாள்; தீமையே வடிவானவளாக இருக்கிறாள். உண்மையிலேயே இப்படி ஒரு பெண் இருந்தாலும் அத்தகைய ஒரு பாத்திரத்தைத் தன் படைப்பில் கொண்டு வரும் ஓர் இலக்கிய ஆசிரியர் அவள் ஏன் அந்த மாதிரி ஆனாள் என்று ஒரு சிந்தனையைக்காட்ட வேண்டாமா?" 5

என வினாத் தொடுப்பது பெண் மீது பழி போடுவதும், பெண்ணடிமைத்தனத்தை விதைப்பதுமான சிந்தனை இன்றைய சமுதாய அமைப்பில் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

## பாலினப் பாகுபாடு

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே

பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி "6

என்று பாரதியார் பெண்ணின் சிறப்புகளைப்பாடுகிறார். இப்பாடலின் வழி ஆணுக்குப் பெண் நிகரென்று கூறும் இவருடைய கருத்து குறிப்பிடத்தக்கது., ஆனால், பெண்களின் நிலை முழுவதுமாக அடிமைத்தனம் இல்லாத அளவிற்கு மாறிவிட்டதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

"பெண்ணுரிமை பெண் ஆணைச் சார்ந்த நபராக இல்லாமல் பெண் தனிநபராக மதிக்கப்பட வேண்டும் என்றும் ஆணுக்கு இருக்கும் உரிமைகள் வாய்ப்புகள் எல்லாம் பெண்ணுக்கும் தரப்பட வேண்டும் என்றும் கோரும் நிலைப்பாடு."7

பெண்ணுரிமை பற்றி அனைவரும் சிந்திக்கின்ற காலகட்டமாக மாறி இருப்பதாகப் பலர் கூறும் இந்த நிலையிலும் பெண் ஆண் பாலினப் பாகுபாடு பல்வேறு இடங்களில் இருக்கிறது பெண்ணுக்குத் தகுதி இருந்தும் குறைவான சம்பளமும் பெண் தலைமையாக இருக்கின்ற இடங்களில் அவளுக்குரிய மரியாதை கிடைக்காத சூழலையும் இச்சமூகத்தில் நாம் காண முடியும் ஊராட்சி மன்றத் தலைவியாக இருக்கும் பெண் கணவனின் சொல்படியே தன் பதவி சார் பணிகளைச் செய்ய கூடிய கள நிலவரம் இன்றைக்கு இல்லாமல் இல்லை பெண் சமத்துவம் பேசும் இந்நாளில்பெண் ஆணை விட ஒரு படி கீழானவள் என்கிற கற்பிதம் சமூகத்தில் இருக்கிறது ஆணும் பெண்ணும் செய்யக்கூடிய ஒரே பணியில் ஆணுக்கு பெண்ணை விட ஊதியம் அதிகமாகவும் பெண்ணுக்கு ஊதியம் குறைவாகவும் இருக்கக்கூடிய சூழ்நிலை கூலித்தொழில் முதல் உயர் தோலில் வரை இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகக் காலம் தோறும் பெண் என்னும் நூலில் "அப்பாரு வந்து தான் கைநாட்டு போட்டு ஸ்கூல்ல சேர்க்கணும் "என்று தலைமை ஆசிரியை விதியைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வந்த தாயிடம் சொல்வதாகக் கூறிவிட்டுப் பெண் சமத்துவம், பெண் கல்வி, பெண் எழுச்சி, பெண் உரிமை என்றெல்லாம் சொற்கள் முழங்கப் பெறும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் ஒரு பெண் குழந்தையைப் பெண்கள் பள்ளியில் சேர்க்கத்தகப்பனே முன்னுரிமை பெற்றவன் என்ற விதி திருத்தி அமைக்கப்படவில்லை என்பது நமக்கெல்லாம் ஆச்சரியமும் வேதனையும் தரக்கூடிய உண்மை" என்று எழுதுகிறார். தியாகம் செய்வதும் ஆணுக்கு அடங்கி நடப்பதும் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுப்பதும் ஆணுக்குச்சேவை செய்வதும் மட்டுமே பெண்ணுக்குரிய விதிகளாக மறைமுகமாக விதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை காலம் தோறும் பின்னும் என்னும் நூலில் ராஜம் கிருஷ்ணன் உரையாடல் வழி நடந்ததை விழிப்புணர்வுக்காக எடுத்துக்காட்டுகிறார்.

"பொம்பளைங்க எதுக்கு நெத்தில சிவப்புப் பொட்டு வைக்கிறாங்க? அவங்க தியாகம் பண்ணுறவங்க, சிவப்பு பொட்டு தியாகத்தின் லட்சியம்; லட்சணம், இந்தியப் பெண்கள் தியாகத்துக்கு இருப்பிடங்கள் .ஆம்பிள எப்படி எப்படியோ இருக்கலாம் ஆனா பொம்பளைங்க தியாகத்துக்கே பிறக்கிறாங்கறதை வலியுறுத்தத் தான் குங்குமப்பொட்டு அவங்களுக்கே என்று வைக்கிறாங்க.

வைக்கணும்."8இந்தக் காலத்திலும் வகிடு எடுத்துப் பெண்கள் பொட்டு வைத்தால் மட்டும் தான் குடும்பப் பாங்கான பெண் என்றும், நடத்தை சரியானவள் என்னும் கற்பிதங்களும் வழக்கத்தில் இருக்கின்றன.

காலமாற்றத்தை ஏற்றுக் கொண்டு நவநாகரிக யுவதிகளாக மாறிச் சில பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் பெண்களைத் தவறாகப் பார்க்கும் கண்ணோட்டமும் இன்றைக்கு இருக்கிறது. தனது வசதி வாய்ப்பிற்கு ஏற்பச் சமூகப் பழக்க வழக்கங்களைத்தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளும் போக்கு உடைய பெண்களைத் தவறாகச் சித்தரிக்கும்போக்கு மறையாமல் ஆணாதிக்கச் சமுதாயத்தில்இன்றும் இருக்கிறது.

பெண்ணை மதிக்கின்ற சமூகம் மட்டும் தான் சரியான வளர்ச்சியை நோக்கிப் பயணப்படுகிற சமுதாயமாக அமையும். ஆண் பெண் சமத்துவ உணர்வும், மனமாற்றமும் பாலினக் குற்றங்களைத் தடுக்க உதவும். இந்த விழிப்புணர்வைச் சமூகத்திற்கு வழங்கும் சிந்தனை ராஜம் கிருஷ்ணனின் காலந் தோறும் பெண் எனும் நூலில் வெளிப்படுகிறது. பெண் சமுதாய உற்பத்திக்கான மக்களைப் பெற்றுப் பேணுகிறாள். அவளை எந்த நிலையிலும் பாதுகாக்க வேண்டும். இளமையில் தந்தையும்; பின்னர் கணவனும்; முதுமையில் மகனும் அவளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட சாத்திரக் கோட்பாடு பெண் இளமையில் தந்தையின் ஆளுகையிலும் பின்னர் கணவனின் ஆதிக்கத்திலும் முதுமையில் மகனுக்கு கீழ்ப்பட்டும். இருப்பதற்கு உரியவள், சுதந்திரம் அவளுக்கு உரியது அல்ல, என்று ஒரே போடாக மாற்றப்பட்டது."9என்று குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

பெண் விடுதலையைக் குறிக்கின்ற பெண்ணியத்தின் கருத்தாக்கங்கள் திறனாய்வுக்கு உட்படும்போது ஆண் சமூகச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட கருத்தியல்களும் செயல்களும் ஆண் சார்பானவை என உணர முடிகிறது. கலைகளும் இலக்கியங்களும் அரசியல் யாவும் ஆணின் கருத்துப் பின்புலங்களாக இருப்பதை அறியப் பெண்ணியத்திறனாய்வு பெரிதும் துணையாகின்றன."10 பெண்ணும் ஆணும் சமமாக நடத்தப்பட வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவதே உண்மையான வளர்ச்சியாகும்.

காலந்தோறும் பெண்ணுரிமைச் சிந்தனைகள் வளருதல் வேண்டும். மத நம்பிக்கைகளும் சடங்குகளும் பெண்ணை மதிக்கும் உணர்வைக் கொண்டதாக மாற்றப்பட வேண்டும் பெண் இரண்டாம் தரப் பாலினம் அல்ல என்கிற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுதல் அவசியம். தான் அடிமைப்படுத்தப் படுகிறோம் தனக்கான உரிமை மறுக்கப்படுகிறது என்ற உணர்வு கூட இல்லாமல் பெண்ணினம் இருத்தல் கூடாது என்றும் தனக்கான உரிமைகளை தானே பெற்றுக் கொள்ள எத்தனை பதம் முயற்சிப்பதும் போராடுவதும் அறச் சிற்றம் கொள்வதும் சட்ட நுணுக்கங்களை உணர்ந்து போராடுவதும் சார்ந்த விழிப்புணர்வை காலந்தோறும் பெண்ணென்னும்நூல் வலியுறுத்துகிறது.

### References

இரா. பிரேமா, 2025 ராஜம் கிருஷ்ணனின் பெண்ணியச் சிறுகதைகள், தொகுப்பு, ஹெர் ஸ்டோரிஸ் வெளியீடு.

ச.வாசுகி, சி.அயோத்தி, 2022பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

பா.செல்வகுமார், 2022 இலக்கியத்தில் பெண்ணியம், தலித் பெண்ணியம், எதிர் வெளியீடு.

ராஜம் கிருஷ்ணன், 2017இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்ய அகாடமி வெளியீடு.

ராஜம் கிருஷ்ணன், 2025. பெண் குரல், சோழன் வெளியீடு,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License